# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/21 - 2023 පෙබරවාරි මස 13 වැනි සඳුදා - 2023.02.13

*2319/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012* (IV)

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ப) எனும் பந்தியின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2023*, பெப்புருவரி 06 ஆந் திகதி.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, செயற்கை மூலக்கூறுகள் மீதான பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆபத்துக்குள்ளாக்கப்பட்ட காட்டு தாவர விலங்கினங்களின் சர்வதேச வியாபாரத்தின் மீதான சமவாயத்தில் நிரற்படுத்தப்படுகின்றதான எவையேனும் பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒவ்வொன்றும் (சிஜரிஎஸ்) வனசீவராசினகள் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து பெறப்படுதல் வேண்டும் என்பதுடன் வேறு இனங்கள் தொடர்பில் உரிமம் ஒன்று இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு, கடற்றொழில் நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. ஆளொருவர் 2017 ஆம் ஆண்டு ஒகத்து 14 ஆந் திகதிய 2032 /5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி செய்வதற்காக செயற்கை மூலக்கூறுகள் மீதான பவள இனங்களின் பண்படுத்தல் ஒழுங்குவிதிகளின்படி அத்தகைய பவள இனங்கள் பண்படுத்தப்பட்டிருந்தாலொழிய செயற்கை மூலக்கூறுகள் மீதான எவையேனும் பவள இனங்களை இறக்குமதி செய்தலோ அல்லது ஏற்றுமதி செய்தலோ ஆகாது.

4. ஏற்றுமதி செய்வதற்காக பவள இனங்களைப் பண்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட மூலக்கூறுகள் 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களை பயன்படுத்த அபிவருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீரியல்பொருட்களைப் பயன்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. செயற்கை மூலக்கூறுகள் மீதான பண்படுத்தப்பட்ட பவள இனங்களை ஏற்றுமதி செய்வதற்குரிய உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பமொன்று இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவம் II இல் பொருளளவில் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. பணிப்பாளர் தலைமையதிபதி 5 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல் தேசிய நீரியல்ப்பொருட்களைப் பயன்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் IV இல் பொருளளவில் உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

7. உரிமத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுவதற்கு முன்னரே இல்லாதாக்கப்பட்டிருந்தாலன்றி வழங்கல் தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதி ஒன்றிற்கு அத்தகைய உரிமம் செல்லுபடியானதாதல் வேண்டும்.

8. செயற்கை மூலக்கூறுகள் மீதான பயன்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்வதற்குரிய உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பமொன்று இதற்கான I அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் I இல் பொருளளவில் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. பணிப்பாளர் தலைமையதிபதி 8 ஆம் ஒழுங்குவிதியில் குறித்தரைக்கப்பட்ட அத்தகைய விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டதன்மேல் தேசிய நீரியல் பொருட்களைப் பயன்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய இதற்கான II அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட II இல் பொருளளவில் உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

10 உரிமத்தின் நியதிகள் மறறும் நிபந்தனைகளை அல்லது ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுவதற்கு முன்னரே இல்லாதாக்கப்பட்டிருந்தாலன்றி வழங்கல் திகதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதி ஒன்றிற்கு அத்தகைய உரிமம் செல்லுபடியானதாதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில்–

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரி வளங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்.

## அட்டவணை I

### படிவம் I

(ஒழுங்குவிதி 8)

பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :

2. விண்ணப்பகாரரின் நிரந்தர முகவரி :

(அ) அஞ்சல் முகவரி :

(ஆ) இலத்திரனியல் அஞ்சல் :

(இ) தொலைபேசி இல. :

(ஈ) தொலைநகல் இல. :

3. தேசிய அடையாள அட்டை இல. :

4. வியாபாரப் பதிவு இல. :

5. அனுப்புபொருள் விபரம் :

| வகை | | இறக்குமதி செய்யப்படும் தொகை | ஏற்றுமதி செய்யப்படும் தேதி | ஏற்றுமதி செய்யும் நாடு |
|---|---|---|---|---|
| வர்த்தகப் பெயர் | விஞ்ஞானப் பெயர் | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

6. அறவிடப்பட்ட கட்டணங்கள் .................................... கி.கி. இற்கு/துண்டொன்றிற்கு ................ ரூபாவாக இருத்தல் வேண்டும்.

7. இவ்வினங்கள் மீள்ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் நாட்டின் பெயர்/நாடுகளின் பெயர்கள்.

நான்/நாங்கள் மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இதன்கண் குறிப்பிடப்பட்ட அத்தகைய விபரங்களில் எவையும் தவறானதென கண்டுபிடிக்கப்பட்டால் அத்தகைய விபரங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட இவ் உரிமம் இல்லாதாக்குவதற்கு ஆளாதல் வேண்டும் என நான்/நாங்கள் உடன்படுகின்றேன்/உடன்படுகின்றோம்.

திகதி ................ .....................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

## அட்டவணை II

### படிவம் II

(ஒழுங்குவிதி 5)

பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :

2. விண்ணப்பகாரரின் நிரந்தர முகவரி :

(அ) அஞ்சல் முகவரி :

(ஆ) இலத்திரனியல் அஞ்சல் :

(இ) தொலைபேசி இல. :

(ஈ) தொலைநகல் இல. :

3. தேசிய அடையாள அட்டை இல. :

4. வியாபாரப் பதிவு இல. :

5. அனுப்புபொருள் விபரம் :

| வகை | | இறக்குமதி செய்யப்படும் தொகை | ஏற்றுமதி செய்யப்படும் திகதி | ஏற்றுமதி செய்யும் நாடு |
|---|---|---|---|---|
| வர்த்தகப் பெயர் | விஞ்ஞானப் பெயர் | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

6. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பதிவு இல. :

7. அறவிடப்பட்ட கட்டணங்கள் .................... கி.கி. இற்கு/துண்டொன்றிற்கு ........... ரூபாவாக இருத்தல் வேண்டும்.

8. ஏற்றுமதி செய்யும் நாடு :

9. மேலதிக விபரங்கள் :

10. நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் முகாமை உரிம இலக்கம் :

நான்/நாங்கள் மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். இதன்கண் குறிப்பிடப்பட்ட அத்தகைய விபரங்களில் எவையும் தவறானதென கண்டுபிடிக்கப்பட்டால் அத்தகைய விபரங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட இவ் உரிமம் இல்லாதாக்குவதற்கு ஆளாதல் வேண்டும் என நான்/நாங்கள் உடன்படுகின்றேன்/உடன்படுகின்றோம்.

திகதி ................

....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அட்டவணை** III

படிவம் III

(ஒழுங்குவிதி 9)

கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களம்

புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு - 10, இலங்கை ,
உரிமை இல. :.........................

செயற்கை ஆக்கக்கூறுகள் மீதான பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம்.

1. ................................................................ என்னும் முகவரியில் வதியும் ............................................. என்பவருக்கு கீழே பந்தி 2(III) இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட செயறகை ஆக்கக்கூறுகளின் மீதான பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கு என்னால் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

| *வகை* | | *இறக்குமதி செய்யப்படும் தொகை* | *ஏற்றுமதி செய்யப்படும் திகதி* | *ஏற்றுமதி செய்யும் நாடு* |
|---|---|---|---|---|
| வர்த்தகப் பெயர் | விஞ்ஞானப் பெயர் | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

*1.* இவ்வுரிமம் வழங்கல் தேதியிலிருந்து ஆறுமாதங்கள் காலப்பகுதியொன்றிற்கு செல்லுபடியானதாதல் வேண்டும்.

*2.* இவ்வுரிமம் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாகும்

(i) இவ்வுரிமமானது அதன்கண் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளினால் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படலாகாது.

(ii) இவ்வுரிமமானது செயற்கை ஆக்கக்கூறுகளை வளர்ப்பதற்காக *2017* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க, ஏற்றுமதிசெய்வதற்காக செயற்கை மூலக்கூறுகள் மீதான பவள இனங்களின் பண்படுத்தல் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(iii) .................................................. தொடர் இலக்கத்தைக் கொண்ட செயற்கை ஆக்கக்கூறு மீதான பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்யப்படுவதற்காக மட்டும் இவ்வுரிமம் ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

*3.* மேலதிக நியதிகளும் நிபந்தனைகளும்

திகதி ..........................................

....................................................
பணிப்பாளர் தலைமையதிபதி,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்
அபிவிருத்தி

**அட்டவணை IV**

படிவம் IV

(ஒழுங்குவிதி *6*)

கடற்றொழில், நீர்வாழ் உயிரினவளங்கள் திணைக்களம்

புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு - 10, இலங்கை ,
உரிமை இல.

செயற்கை ஆக்கக்கூறுகள் மீதான பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம்.

*1.* .................................................................. என்னும் முகவரியில் வதியும் .............................................. என்பவருக்கு கீழே பந்தி *2*(III) இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட செயற்கை ஆக்கக்கூறுகளின் மீதான பவள இனங்களை இறக்குமதி செய்வதற்கு என்னால் இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

| *வகை* | | *அலகொன்றிற்கான தொகை (கி. கி.)* |
|---|---|---|
| வர்த்தகப் பெயர் | விஞ்ஞானப் பெயர் | |
| | | |
| | | |

1. இவ்வுரிமம் வழங்கல் தேதியிலிருந்து ஆறுமாதங்கள் காலப்பகுதியொன்றிற்கு செல்லுபடியானதாதல் வேண்டும்.

2. இவ்வுரிமம் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாகும்

(i) இவ்வுரிமமானது அதன்கண் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளினால் பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படலாகாது.

(ii) இவ்வுரிமமானது செயற்கை ஆக்கக்கூறுகளை வளர்ப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஏற்றுமதிசெய்வதற்காக செயற்கை மூலக்கூறுகள் மீதான பவள இனங்களின் பண்படுத்தல் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(iii) .................................................. தொடர் இலக்கத்தைக் கொண்ட செயற்கை ஆக்ககூறு மீதான பண்படுத்தப்பட்ட பவள இனங்களை இறக்குமதி செய்யப்படுவதற்காக மட்டும் இவ்வுரிமம் ஏற்புடையற்காலதாதல் வேண்டும்.

3. மேலதிக நியதிகளும் நிபந்தனைகளும்

திகதி ..........................................

.....................................................
பணிப்பாளர் தலைமையதிபதி,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்
அபிவிருத்தி.

EOG 02 - 0139